பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ஜெர்மனி நாட்டுக்கு கல்விச் சுற்றுலா சென்றுள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் அங்குள்ள உலகப் புகழ்பெற்ற BMW தொழில் நுட்ப அருங்காட்சியத்தினை பார்வையிட்டு ஆரம்பகாலம் முதல் இன்று வரையிலும் வாகன வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தொழில்நுட்ப வளர்ச்சியினையும் தெரிந்து கொண்டனர்.

சட்ட நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாமல்

அரைவேக்காட்டுத்தனமாக அறிக்கை விடுக்கும் எடப்பாடி பழனிசாமி!

அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, மே 30 -

சட்டரீதியான நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாத எடப்பாடி பழனிசாமி தாம் ஒரு அரைவேக்காடு என்பதை அவரே அம்பலப்படுத்திக்கொள்கிறார் என்று அமைச்சர் ரகுபதி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

சட்டரீதியான நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாத எடப்பாடி பழனிசாமி தாம் ஒரு அரைவேக்காடு என்பதை அவரே அம்பலப்படுத்திக் கொள்கிறார்.

உயர்நீதிமன்றம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டது உண்மை தான். அந்த SIT தமிழ்நாடு காவல்துறைகோ திமுக அரசுக்கோ தொடர்பு இல்லாததா? அந்த SIT வேறு மாநில அதிகாரிகளோ ஒன்றிய அரசின் அதிகாரிகளோ இல்லை. அவர்கள் தமிழ் நாடு அரசின் காவல்துறை தானே? அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் SIT குழு சிறப்பாக செயல்பட்டது என்றால் திமுக ஆட்சியில் காவல்துறை சிறப்பாக செயல்பட்டது என்று தான் பொருள்.

அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஞானசேகரனை உடனடியாக கைது செய்து, நீதிமன்றக் காவலில் வைத்தது திமுக அரசின் காவல்துறை.

அவர் ஜாமின் பெறாத வகையில் நீதிமன்றத்தில் வாதாடியது திமுக அரசின் வழக்கறிஞர்கள்.

வழக்கை உடனடியாக விசாரிக்க நீதிமன்றம் நியமித்த SIT குழு பெண் அதிகாரிகள் மூவரும் அவர்களுக்கு துணையாக இருந்த விசாரணை குழுவும் திமுக அரசின் காவல்துறையின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள்.

இப்படி, திமுக அரசின் கீழ் செயல்படும் காவல்துறையால் தான் ஐந்தே மாதத்தில் விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றம் ஞானசேகரனை குற்றவாளி என தீர்ப்பளித்து ள்ளது என்று சொன்னால் எடப்பாடி பழனிசாமி ஏன் எரிகிறது? உடல் முழுவதும் இவ்வளவு எரிவது நல்லதல்ல, மருத்துவரை அணுகுவது எடப்பாடி பழனிசாமிக்கு நல்லது.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அதிமுகவினர், விசாரணை நடத்தி முக்கிய குற்றவாளி களை கைது செய்தது சிபிஐ. தீர்ப்பு வழங்கியது சிபிஐ நீதிமன்றம். சாட்சிகள் பிறழ்சாட்சியமாக மாறாமல் காத்தது திமுக அரசின் காவல் துறை என்ற போதிலும் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகளுக்கு தாம் தான் காரணம் வாய்க்கூசாமல் எடப்பாடி பழனிசாமி கூறியதை பார்த்து சந்தி சிரித்தது என்பது தானே உண்மை.

அண்ணா பல்கலை. வழக்கில் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடந்தது என்பதற்காக நீதிமன்றம் தான் பாராட்டுக்குரியது எடப்பாடி பழனிசாமி சொல்வதும், விசாரித்து ஆதாரங்களை சமர்பித்த காவல் துறையினருக்கும், குற்றத்தை நிரூபிக்க வாதாடிய வழக்கறிஞர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை பாராட்டுக்குரியவர்கள் இல்லை என சொல்வதும் அவரின் அறியாமையை காட்டுகிறது.

"அரசியல் குறுக்கீடு இன்றி நடக்க வேண்டிய SIT விசாரணையை நீங்கள் Influence செய்தீர்கள் என்று வாக்குமூலம் அளிக்கிறீர்களா?" என்று முதலமைச்சரைப் பார்த்து கேள்வி எழுப்பும் எடப்பாடி பழனிசாமி, அதற்கான ஆதாரத்தை SIT நியமித்த நீதிமன்றத்திடம் ஓரிரு நாட்களுக்குள் கொடுத்துவிட்டு, சொல்லும் செயலும் ஒன்றே மானமுள்ளவர் பழனிசாமி என்று நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மானங்கெட்ட பிறவி பழனிசாமி என ஊடகங்கள் முன்பு ஒப்புக்கொள்ள வேண்டும். அதை செய்வீரா?...

அதிமுக ஆட்சி அமைந்தால் "அந்த சார்கள்?" யார் என்பதை கண்டுபிடிப்போம் என எந்த அடிப்படை அறிவோ வெட்கவோ இல்லாமல் சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை, சாத்தான்குளம் தந்தை மகன் கொலை, கொடநாடு கொலை, கொள்ளை போன்ற அதிமுக ஆட்சியில் நடந்த குற்றங்களின் விசாரணையை எடப்பாடி பழனிசாமி ஆட்சி எப்படி கையாண்டது என்பது உலகத்திற்கே தெரியும்.

அண்ணா பல்கலை. வழக்கை விசாரித்த SIT குழு நீதிமன்றத்தின் முழு மேற்பார்வையில் செயல்பட்டது, அதுகூட திமுக அரசின் காவல்துறைக்கு உட்பட்டது என்றாலும் விசாரணை நீதிமன்றமும் மேற்பார்வை பார்த்த சென்னை உயர்நீதிமன்றமும் திமுக ஆட்சிக்கு உட்பட்டவை இல்லையே?... அந்த சார் யார்? என்பதற்கு ஆதாரம் இருந்தால் நேரடியாக நீதிமன்றத்தில் சமர்பித்து சந்தேகத்தை இப்போதே உறுதி செய்யலாமே?

எந்த ஆதாரமும் கையில் இல்லாமல் கடந்த 5 மாதமாக புலம்பியது போதும் எடப்பாடி பழனிசாமி அவர்களே? குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு தண்டனை வாங்கி தரும் வேலையை திமுக அரசு சிறப்பாக செய்துவிட்டது. நீங்கள் புலம்பாமல் அமைதியாக தூங்குங்கள்...

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் அதிமுக பிரமுகர்களுக்கு தொடர்பு இருந்ததை திமுக பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அம்பலப்படுத்தியால், காழ்ப்புணர்ச்சியாக அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் திமுக பிரமுகர்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறி "யார் அந்த சார்?" என சமூக வலைதளங்கள் மூலம் அரசியல் செய்த எடப்பாடி பழனிசாமி, அதற்கான ஆதாரங்களை விசாரணை நீதிமன்றத்தில் கொடுத்து நிரூபித்திருக்க வேண்டாமா? ஏன் ஆதாரங்களை இது வரை தரவில்லை? அவதூறுக்கு ஆதாரம் இருந்தால் தானே தர முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்டம் மற்றும் பெரியகுளம் நகர கழக சார்பாக பெரியகுளம் பழைய பஸ் நிலையம் அருகில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் முகமது இலியாஸ், வரவேற்புரை ஆற்றினார். சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவை தலைவர் மாவட்ட பி.டி.செல்ல பாண்டியன், தலைவர் ஆகியோர் முன்னிலை வைத்தனர். கழக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை ஆற்றினார். நகரச செயலாளர்கள் நாராயண பாண்டியன், புருஷோத்தமன், ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன், எல்.எம்.பாண்டியன், சக்கரவர்த்தி, அய்யப்பன், மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, மே 30 -

இன்று 30ஆம் தேதி சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சிவகங்கையில் நடைபெறுகிறது. இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் சிவகங்கை ராயல் மகாலில் நடைபெறுகிறது .

இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட பொருட்கள் குறித்து ஆலோசனை நடைபெறுகறது..

1. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் கொண்டாடுவது குறித்து.

2. ஜுன் 1ம்தேதி மதுரையில் நடைபெறும் கழக பொதுக்குழுவில் பங்கேற்பது குறித்து.

3. plc முக வர்கள் சரிபார்த்தல் ,plc யில் தகவல் தொழில்நுட்ப அணியினர் நியமித்தல் குறித்து .

4. கழக வளர்ச்சி பணிகள் .

எனவே இந்த செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை மாவட்ட செயலாளர் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை, மே 30 -

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் தச்சநல்லூர், பாளையங்கோட்டை, மேலப்பாளையம், நெல்லை பேட்டை ஆகிய பகுதிகளில் வருகிற ஜூன் 3ஆம் தேதி அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உள்ளது.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வ காப் பங்கேற்று நிக ழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.என நெல்லை மாநகர செயலாளர்சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்ப தாவது.

வருகிற ஜூன் 3ஆம் தேதி அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட நெல்லை மாநகர தி.மு.க சார்பில் தச்சை பகுதியில் பகுதி செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையிலும், பாளை பகுதியில் பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை தலைமையிலும், மேலப்பாளையம் பகுதியில் பகுதி செயலாளர் துபாய் சாகுல் தலைமையிலும், நெல்லை பேட்டை பகுதியில் பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி தலைமையிலும் நடைபெறுகிறது.

அதன்படி நெல்லை பேட்டை பகுதி காலை 9 மணி அளவில் சந்தி பிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் மாநகர தி.மு.க ஏற்பாடு.

தச்சை பகுதி நெல்லை சந்திப்பு காலை 930 மணிக்கு பகுதி செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாடு.பாளை பகுதி மார்க்கெட் சாலை காலை 10 மணி மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்மீரான் ஏற்பாடு.

மேலப்பாளையம் பகுதி காலை 10.30 மணி மேலப்பாளையம் சந்தை முக்கு நேசம் டீ கடை அருகில் மேலப்பாளையம் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் யூசப் ஏற்பாட்டிலும் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுகளில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் பங்கேற்று நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.

இவ்வாறு நெல்லை மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பங்கேற்பு!

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக கலந்தாய்வுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., அறிக்கை!

விழுப்புரம், மே 30 -

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. மண்டல பொறுப்பாளர் கலந்தாய்வுக் கூட்டம் இன்று (30.05.2025 - வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு, வானூர் சட்டமன்ற தொகுதிக்கும், 3.00 மணிக்கு விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்கும் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற்ற உள்ளது.

எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார். விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் துரை கி.சரவணன், மாநில ப பொறியாளர் அணி பசயலாளர், வானூர் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் எஸ்.கே.பி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்து கலந்து கொள்கிறார்கள். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் வியாழன் தோறும் மாநகராட்சி மக்களின் கோரிக்கைகளையேற்று அதற்கு உடனடி தீர்வு கிடைக்கும் வகையில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில், மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்றது. முகாமில் மாநகர் நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, மாநகராட்சி பொறியாளர் ரகுராமன், நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி பொறியாளர்கள் ராஜசீலி, சுஜின் உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மு. அரங்கநாதன்
மே 30 (2004)

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் தொட்டு கழகப் பணியாற்றியவர்.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.

விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.